**O.S.No. 256/2017**

**Date: 24.01.2024**

**வா.சா 1 காளிமுத்து**

**த.பெ வெளியப்பன் வயது 35**

**பிரதிவாதி 1 தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பிராது தபசில்சொத்திற்கு அடுத்து மேல்புறம் உள்ள சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு பிறவியிலேயே இரண்டு காது கேட்காமல் வாய் பேசமுடியாதவர் என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதி பிராது தபசில் சொத்திற்கு அடுத்த மேல்புறம் உள்ள சொத்தினை 17.05.1989 மற்றும் 19.05.1993ல் கிரைய ஆவணங்கள் மூலமாக கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றுசொன்னால் அவர் எந்த தேதியில் கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆனால் அது 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து. பிராதின் தபசில் சொத்தின் ஒரு பகுதியான 4 செண்ட் இடத்தை வா.சா.ஆ.1ன் மூலம் 18.11.1989 கிரைய பத்திரத்தில் உங்கள் தந்தை பெயருக்கு ஏற்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரிதான். உங்கள் தகப்பனார் 18.11.1989ல் கிரையம் பெற்ற பிறகு வா.சா.ஆ.1 மூலம் உங்கள் தந்தை பிரிவின்றி 4 செண்ட் நிலத்தினை கிரையம் பெற்றிருந்தார் என்றால் சரிதான். உங்கள் தந்தையார் அந்த சொத்தை கிரையம் பெறும் பொழுது பிரிக்கப்படாமல் ஏனைய சொத்துக்களுடன் இருந்த காரணத்தினால் தான் பிரிவின்றி 4 செண்ட் நிலம் என்று கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்துள்ள பிராதில் வா.சா.ஆ.1 மூலம் கிரையம் பெற்ற பிரிவின்றி 4 செண்ட் நிலம் எப்பொழுது பிரிவு செய்யப்பட்டது என்பதனை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்த வா.சா.ஆ.3 உங்கள் பெரிய தகப்பனார் கிரையம் பெற்ற ஆவணம் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்திலும் உங்களது பெரிய தகப்பனார் பிரிவின்றி செண்ட் 4 1/2 கிரையம் பெற்றுள்ளதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்துள்ள பிராதில் வா.சா.ஆ 3 மூலம்

உங்கள் பெரிய தகப்பனார் கிரையம் பெற்ற பிரிவின்றி 4 1/2 செண்ட் நிலம் எப்பொழுது பிரிவு செய்யப்பட்டது என்பதனை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உங்களுடைய வழக்கானது உங்கள் பெரிய தகப்பனார் காளிமுத்து தேவர் என்பவர் இரு கிரைய ஆவணங்கள் வா.சா.ஆ.2 மற்றும்3 மூலமாக கிரையம் பெற்ற 9 1/2 செண்ட் நிலத்தினை உங்களுடைய தகப்பனார் கிரையம் பெற்றுள்ளார் என்பது தான் வழக்கு என்றால் சரிதான். உங்களுடைய பிராதுபடி உங்கள் பெரிய தகப்பனார் காளிமுத்துவிடம் இருந்து வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்கள் மூலமாக உங்கள் தகப்பனார் கிரையம் பெற்றதாக சொல்லும் 9 1/2 செண்ட் நிலமும், உங்கள் தகப்பனார் கிரையம் பெற்ற 4 செண்ட் இடத்தினையும் மொத்தம் 13 1/2 செண்ட் நிலத்தினை அனுபவம் செய்து வருவதாக தான் வழக்கு என்றால் சரிதான். உங்கள் பிராதுபடி உங்கள் தகப்பனார் பிராது தபசில் சொத்தில் 1998 ம் ஆண்டு வீடு கட்டி அனுபவம் செய்து சொத்து வரி செலுத்தி வருகிறார் என்பது தான் வழக்கு என்றால் சரிதான். பிராது தபசில் சொத்து குறித்து உங்களது பெயருக்கு நிறைவேற்றப்பட்ட ஏற்பாடு தான் வா.சா.ஆ.5 என்றால் சரிதான். வா.சா.ஆ–5 ஆவணம் 14.05.2012 ல் நிறைவேற்றப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் தபசில் சொத்தில் வீடு இருப்பதாகவும், வரி விதிப்பு ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்படாமல் காலி மனையாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். யாரும் வீடு குறிப்பிட்டு பத்திரத்தில் எழுதுவது கிடையாது. அவ்வாறு வீடு இருப்பதை குறிப்பிட்டு ஆவணத்தில் எழுதுவது கிடையாது என்று தவறாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் மறுக்கிறேன். இவ்வழக்கில் வழக்கு சொத்தினை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம்செய்யப்பட்டார் என்று சொன்னால் சரிதான். வாதி தரப்பு மனுவின் அடிப்படையில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை **நீ.ம.சா.ஆ.1** ஆகும். ஆணையர் வரைபடம் **நீ.ம.சா.ஆ.2** ஆகும்.

அறிக்கையுடன் இணைக்கப்பட்ட புல வரைபடம் **நீ.ம.சா.ஆ.3** ஆகும். நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சாஆ.1 முதல் 5 ஆவணங்களில் எவ்வற்றிலும் தபசில் சொத்திற்கான கிழமேல் அளவுகள் குறிப்பிடவில்லை என்று சொன்னால் செண்ட் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது அளவுகள் குறிப்பிடவில்லை. நீங்கள் தாக்கல் செய்துள்ள பிராதிலும் தபசில் சொத்திற்கான கிழமேல் அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடம் நீ.ம.சா.ஆ.2 சரியானது தானா என்று சொன்னால் சரிதான். நீங்கள் சொல்லுவதை போன்று தபசில் சொத்தில் உங்கள் அனுபவத்தை 1ம் பிரதிவாதி இடையூறு செய்வதாக சொல்லுவது உண்மையானது அல்ல என்று சொன்னால் மறுக்கிறேன். நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 மற்றும் 3 ஆவணம் ஆகியவற்றில் பிரிவின்றி என கிரையம் பெற்றுள்ளதால் தாங்கள் கோரும் விளம்புகை பரிகாரம் நிலைநிற்க தக்கது அல்ல என்றால் மறுக்கிறேன். 1ம் பிரதிவாதி இவ்வழக்கில் அவசியமற்ற தரப்பினர் என்று சொன்னால் மறுக்கிறேன். 1ம் பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் மறுக்கிறேன்.

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

3ம் பிரதிவாதியானவர் தபசில் சொத்திற்கு கீழ்பக்கம் உள்ள சொத்தில் குடியிருப்பவர் என்று சொன்னால் சரிதான். கீழ்பக்கம் உள்ள சொத்தின் சர்வே எண். 866/2c2 என்றால் சரிதான். மேற்படி சொத்தில் 3ம் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். சுமார் எத்தனை ஆண்டுகாலமாக 3ம் பிரதிவாதி பிராது சொத்திற்கு கீழ்புறம் உள்ள சொத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் நாங்கள் வீடு கட்டிய பிறகு தான் அவர்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். சுமார் 20 ஆண்டுகளாக 3ம் பிரதிவாதி அந்த இடத்தில் குடியிருந்து வருகிறார். உங்களுடைய பிராது தபசில் சொத்தின் புல எண். 866/2A என்றால் சரிதான்.

வழக்கு சொத்திற்கும் 3ம் பிரதிவாதி சொத்திற்கும் தொடர்பில்லை என்று சொன்னால் சரிதான். எங்கள் சொத்தில் சுமார் 1 அடி அளவிற்கு சுவற்றினை 3ம் பிரதிவாதி எழுப்பியுள்ளார். அவ்வாறு 3ம் பிரதிவாதி சுமார் 1 அடி அளவிற்கு உங்கள் சொத்தினை ஆக்கிரமித்து சுவற்றினை எழுப்பியுள்ளார் என்பதை பிராதில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ஆணையர் அளப்பதற்கு முன்னர் எனக்கு 3ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்த சுமார் 1 அடி அளவு குறித்து தெரியாது. நான் பலமுறை இடத்தை அளப்பதற்கு முயற்சி செய்தும் 3ம் பிரதிவாதி அளக்கவிடவில்லை. 3ம் பிரதிவாதி ஆக்கிரமனம் செய்து சுவர் எழுப்பியதாக நீங்கள் சொல்லும் சுமார் 1 அடி அளவு குறித்து ஆக்கிரமனம் நீக்க கோரியும் சுவற்றினை இடிக்க கோரியும் பரிகாரம் எதுவும் இவ்வழக்கில் கோரவில்லை என்றால் சரிதான். மேற்படி பரிகாரம் தேவையில்லை என்ற காரணத்தினால் தான் நீங்கள் பிராதில் கோரவில்லை என்று சொன்னால் மறுக்கிறேன் ஆணையர் சொத்தை அளக்கும் போது தான் எனக்கு ஆக்கிரமனம் குறித்து தெரியவந்தது. மேற்படி 1 அடி சுவரானது 3ம் பிரதிவாதியும் மேற்பக்கம் தென்வடல் சுவர் என்றால் சரிதான். சுமார் 20 ஆண்டு காலமாக 3ம் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருவதாக சொல்லும் அந்த காலத்திலேயே மேற்படி 1 அடி சுவர் கட்டப்பட்டது என்றால் சரிதான். உங்கள் வழக்குரையில் பிராது தபசில் சொத்தின் மேல்பக்க உரிமையாளர் இடையூறு செய்வதாக தான் 1ம் பிரதிவாதிக்கு எதிராக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களுடைய வழக்குரையில் 3ம் பிரதிவாதி இடையூறு செய்வதாக எதுவும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் விரிவாக சொல்லவில்லை. உங்களுடைய வழக்கு மூலத்திலும் 3ம்பிரதிவாதி எதிராக எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். 3ம் பிரதிவாதி இவ்வழக்கின் அவசியமற்ற தரப்பினர் எனவும், வேண்டுமென்ற அவர்களுக்கு எதிராக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் மறுக்கிறேன்.

3ம் பிரதிவாதியின் சரியான பெயர் வேலுத்தாய் எனவும், நீங்கள் வேல்தாய் என குறிப்பிட்டுள்ளீர்கள் என்று தவறாக குறிப்பிட்டு கட்சி நடத்திவருகிறீர்கள் என்றால் மறுக்கிறேன். 3ம் பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் மறுக்கிறேன்.

**ம.வி இல்லை.**